[2019] 1 எஸ்.சி.ஆர். 763

சுமித் குமார் சாஹா

–எதிர்–

ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(உரிமையியல் மேல்முறையீடு எண். 1299/2019)

ஜனவரி 30, 2019

[மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ் ரெட்டி]

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 – இழப்பு – கணக்கிடுதல், அடிப்படை – மேல்முறையீட்டாளர் 2007–ஆம் ஆண்டில் ரூ.51.74 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் ஒரு அகழ் இயந்திரத்தை வாங்கி, உடனடியாக அதற்கு காப்பீடு செய்தார் – அந்தக் காப்பீட்டுத் திட்டம் 22.7.2009 முதல் 21.7.2010 வரையிலான காலத்திற்குப் புதுப்பிக்கப்பட்டது மற்றும் அதன் காப்பீட்டுத் தொகை ரூ.46.56 இலட்சம் ஆகும் – அகழ் எந்திரம் வாடகைக்கு விடப்பட்டு, வேறொரு இடத்தில் பயன்படுத்தப்பட்டது; அந்த இடமாற்றம் குறித்தும் முறையாகத் தெரிவிக்கப்பட்டது – 3.6.2010 அன்று, அந்த மாற்றப்பட்ட இடத்தில்

இருந்தபோது, ஏற்பட்ட தீ விபத்தில் அகழ் எந்திரம் கடுமையாக சேதமடைந்தது – காப்பீட்டு நிறுவனத்தின் மதிப்பாய்வாளர், இழப்பு மற்றும் சேதத்தை ரூ.25.24 இலட்சம் என மதிப்பிட்டார் – இதனை எதிர்த்து மேல்முறையீட்டாளர் மாநில நுகர்வோர் ஆணையத்தில் புகார் அளித்தார் – அகழ் எந்திரம் முற்றிலுமாக சேதமடைந்துவிட்டதாகவும், எனவே காப்பீட்டுத் தொகையான ரூ.46.56 இலட்சத்துடன் வட்டி மற்றும் இழப்பீட்டைப் பெற தனக்கு உரிமை உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்தார் – மேல்முறையீட்டாளரின் மதிப்பாய்வாளர், "முழுமையான இழப்பு அடிப்படையில்" சேதத்தை ரூ.41.90 இலட்சம் என மதிப்பிட்டார் – மாநில ஆணையம் இந்தப் புகாரை ஏற்றுக்கொண்டு, ரூ.41.90 இலட்சத்தை வட்டியுடன் வழங்க உத்தரவிட்டது – ஆனால், தேசிய ஆணையம் எதிர்மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டைப் பகுதியாக அனுமதித்து, ரூ.34.17 இலட்சத்தை மட்டும் வழங்க உத்தரவிட்டது – மேல்முறையீட்டில், முடிவு : தீ விபத்தின் விளைவாக, அகழ் எந்திரம் "முழுமையான இழப்பு" என்பது இரு தரப்பினராலும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும் – காப்பீடு செய்யப்பட்ட பொருளின் உண்மையான மதிப்பாக ஒரு குறிப்பிட்ட தொகையை இரு தரப்பினரும் எட்டியிருந்தனர் – அவ்வாறு இரு தரப்பினராலும் அறிவிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகையிலிருந்து உண்மையான மதிப்பு மாறுபட்டது என்று வாதிடவோ அல்லது அந்தத் தொகையை மறுக்கவோ எந்தத் தரப்பிற்கும்

இடமில்லை – இரு தரப்பினரும் ஒரு புரிதலுக்கு வந்து ஒப்பந்தம் செய்து கொண்ட நிலையில், அந்தப் புரிதலானது தவறான தகவல்கள், மோசடி அல்லது கட்டாயப்படுத்துதல் ஆகியவற்றால் பாதிக்கப்படாதவரை, அந்தத் தொகைக்கே இரு தரப்பினரும் கட்டுப்பட்டவர்கள் ஆவர் – காப்பீட்டு நிறுவனத்தின் மதிப்பாய்வாளர், ஒரு புதிய அகழ் எந்திரத்தின் விலை ரூ.51 இலட்சம் எனக் கொண்டு, அந்த இயந்திரத்தின் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் எனக் கருதி, 32.5 சதவீத தேய்மானத்தைக் கழித்து இழப்பீட்டைக் கணக்கிட்டார் – காப்பீட்டு நிறுவனத்தின் மதிப்பாய்வாளர், 'காப்பீட்டுத் தொகை' என நிர்ணயிக்கப்பட்டிருந்த மதிப்பை உதாசீனப்படுத்திவிட்டார் – தேய்மானம் என்பது எப்பொழுதும் 'காப்பீட்டுத் தொகை' என்பதை அடிப்படையாகக் கொண்டே கணக்கிடப்பட வேண்டும் – ஆகவே, இந்த வழக்கில் தொடக்கத் தொகையானது 'காப்பீட்டுத் தொகை' என நிர்ணயிக்கப்பட்ட தொகையாகவே இருக்க வேண்டும் – காப்பீடு எடுக்கப்பட்ட பிறகு, அந்த அகழ் எந்திரம் பதினொரு மாதங்கள் பயன்படுத்தப்பட்டதால், அந்த 'காப்பீட்டுத் தொகையிலிருந்து' ஒரு நியாயமான தேய்மானத்தைக் கழிக்க வேண்டும் – காப்பீடு செய்தவரால் நியமிக்கப்பட்ட மதிப்பாய்வாளர், 10 சதவீதத்தைத் தேய்மானமாகக் கழித்து ரூ.41.90 இலட்சம் என்ற தொகையை எட்டியது சரியானது – தேசிய ஆணையத்தின் முடிவு தள்ளுபடி செய்யப்படுகிறது, மேலும் மாநில ஆணையம் வழங்கிய தீர்ப்புரை மற்றும் உத்தரவு மீட்டளிக்கப்படுகிறது.

மேல்முறையீட்டை அனுமதித்த நீதிமன்றம் தீர்மானித்ததாவது :–

1. சம்பந்தப்பட்ட அந்தப் காப்பீட்டுத் திட்டத்தில், அகழ் எந்திரம் "தயாரிக்கப்பட்ட ஆண்டு" "2007" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது; அதேவேளையில் அக்காப்பீடு 22.07.2009 முதல் 21.07.2010 வரையிலான காலத்திற்குரியதாக இருந்தது. அந்த அகழ் எந்திரம் 2007–ஆம் ஆண்டில் ரூ.51.74 இலட்சத்திற்கு வாங்கப்பட்டது என்ற உண்மையை இரு தரப்பினரும் அறிந்திருந்தனர். ஒப்பந்தத்தில் காப்பீட்டுத் தொகை ரூ.46,56,600/– எனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்தத் தொகையின் முக்கியத்துவத்தையும், காப்பீடு பெறப்பட்ட தேதியில் அது அகழ் எந்திரத்தின் மதிப்பைக் குறிக்கிறது என்பதையும் இரு தரப்பினரும் அறிந்திருந்ததாகவே கருதப்பட வேண்டும். இந்த விவகாரத்தில், "குறைந்தப்பட்ச காப்பீடு" செய்யப்பட்டதாக காப்பீட்டு நிறுவனம் எந்தவொரு வாதத்தையும் முன்வைக்கவில்லை. மறுபுறம், காப்பீட்டுத் தொகையான ரூ.46,56,600/– என்பதற்கு மாறாக, தேய்மானம் கழிக்கப்பட்ட அதன் மதிப்பு ரூ.34,42,500/– என்று வாதிடப்பட்டது. எனவே, காப்பீட்டு நிறுவனத்தின் வாதப்படி பார்த்தால், இது ஒருவேளை "மிகை காப்பீடு" செய்யப்பட்ட ஒரு விவகாரமாகவே இருந்திருக்கும். காப்பீட்டுக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் பார்த்தால், காப்பீட்டு நிறுவனம் எதை உண்மையான மதிப்பு என்று நியாயப்படுத்துகிறதோ, அதைக் காட்டிலும் அதிகமான தொகையை

அக்குழுமம் பெற்றுள்ளது. இரு தரப்பினரும் முழு விழிப்புணர்வுடன், காப்பீடு செய்யப்பட்ட பொருளின் உண்மையான மதிப்பாக ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயித்த பிறகு, அந்தத் தொகையை மறுப்பதற்கோ அல்லது காப்பீட்டுத் தொகையாக அறிவிக்கப்பட்டதிலிருந்து உண்மையான மதிப்பு மாறுபட்டது என்று வாதிடுவதற்கோ எந்தத் தரப்பிற்கும் உரிமை இல்லை. இரு தரப்பினரும் ஒரு புரிதலுக்கு வந்து உடன்பட்ட நிலையில், அந்தப் புரிதலானது தவறான தகவல்கள், மோசடி அல்லது கட்டாயப்படுத்துதல் ஆகியவற்றால் பாதிக்கப்படாதவரை, நிர்ணயிக்கப்பட்ட அந்தத் தொகைக்கு இரு தரப்பினரும் கட்டுப்பட்டவர்கள் ஆவர்.

2.1. காப்பீட்டு நிறுவனத்தின் கணிப்பாய்வாளர், ஒரு புதிய அகழ் எந்திரத்தின் விலை ரூ. 51 லட்சம் எனக் கொண்டு, அதன் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் எனக் கருதி, 32.5% தேய்மானத்தைக் கழித்து இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிட்டுள்ளார். எனவே, அவருடைய மதிப்பீட்டில், ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளில் நிர்ணயிக்கப்பட்ட ரூ. 46,56,600/– என்ற தொகைக்கு எந்தவொரு முக்கியத்துவமும் அளிக்கப்படவில்லை. அவர் சொல்வது சரிதானா, நியாயமானதா, அகழ் எந்திரத்தின் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் என்று அவர் எப்படி கருத முடியும்? ஒருவேளை அதுதான் இரு தரப்பினருக்கும் இடையிலான புரிதலாக இருந்திருந்தால், காப்பீட்டுத் தொகை வேறு ஒரு மதிப்பாக இருந்திருக்கும். ஒருவேளை,

கணிப்பாய்வாளர், காப்பீட்டு ஒப்பந்தம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து விபத்து நடந்த நாள் வரையிலான காலத்திற்கு மட்டுமே தேய்மானத்தைக் கணக்கிட்டிருந்தால், அத்தகைய நடவடிக்கை நிச்சயமாக நியாயமானதாக இருந்திருக்கும். ஆனால், மேற்கொண்ட நடவடிக்கையானது, காப்பீட்டு ஒப்பந்தத்திற்குப் பிந்தைய காலத்திற்கான தேய்மானத்தை மட்டும் கணக்கில் கொள்ளாமல், ஒப்பந்தத்திற்கு முந்தைய காலத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. அந்த மதிப்பீடு செய்யும் பணி ஏற்கனவே இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டுவிட்டது; மேலும் அவர்களின் மதிப்பீட்டின்படி, காப்பீடு எடுக்கப்பட்ட நாளில் அகழ் எந்திரத்தின் உண்மையான மதிப்பு ரூ. 46,56,600/– ஆகும். இத்தகைய ஒப்பந்தம் மற்றும் புரிதல் இருக்கும் நிலையில், கணிப்பாய்வாளர் காப்பீட்டுப் பத்திரம் அல்லது ஒப்பந்தம் தொடங்கப்பட்ட தேதிக்கு முந்தைய காலத்திற்கான தேய்மானத்தைக் கணக்கிட்டிருக்க முடியாது. மேற்கூறிய விதியின் நோக்கம் யாதெனில், எந்திரம் முற்றிலும் பழுதடைந்த அந்த நாளில், அதன் சரியான மதிப்பீட்டை கண்டறிவதே ஆகும். காப்பீடு செய்யப்பட்ட சொத்திற்குத் தீ விபத்து ஏற்பட்ட தேதியில் அதன் உண்மையான மதிப்பை மதிப்பிடுவதற்கு, காப்பீட்டு ஒப்பந்தம் தொடங்கப்பட்ட தேதிக்குப் பிந்தைய காலத்திற்கான கணக்கீட்டை மட்டுமே அவர் மேற்கொண்டிருக்க முடியும். அத்தகைய மதிப்பீட்டு நோக்கங்களுக்காக, ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளில் 'காப்பீட்டுத் தொகை' என விவரிக்கப்பட்ட

தொகையிலிருந்தே கணக்கீடு தொடங்கப்பட வேண்டும். காப்பீட்டுத் தொகை என நிர்ணயிக்கப்பட்ட அந்த மதிப்பை அலட்சியப்படுத்தவோ அல்லது புறக்கணிக்கவோ கணிப்பாய்வாளருக்கோ அல்லது காப்பீட்டு நிறுவனத்திற்கோ அதிகாரம் இல்லை. தற்போதைய வழக்கில், மேற்கூறிய மதிப்பைக் கருத்தில் கொண்டே இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2.2. காப்பீட்டு நிறுவனத்துடனான ஒப்பந்தமானது மோசடி, கட்டாயப்படுத்துதல் அல்லது தவறான தகவல்கள் மூலம் பெறப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர அல்லது 'உச்சக்கட்ட நம்பிக்கை' கொள்கை மீறப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர – மற்ற அனைத்துச் சூழல்களிலும், காப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட மதிப்பிற்கு இரு தரப்பினரும் கட்டுப்பட்டவர்கள் ஆவர். எனவே, கணிப்பாய்வாளரோ அல்லது காப்பீட்டு நிறுவனமோ 'காப்பீட்டுத் தொகை' என்ற மதிப்பை எந்த வகையிலும் கேள்விக்குட்படுத்துவதோ அல்லது புறக்கணிப்பதோ நியாயமானது அல்ல. மேற்கொண்டு தேய்மானம் ஏதேனும் இருக்குமாயின், அதனைக் 'காப்பீட்டுத் தொகை' என்ற மதிப்பைக் கருத்தில் கொண்டே எப்போதும் கணக்கிட முடியும். எனவே, இந்த வழக்கில் தொடக்கத் தொகையானது, 'காப்பீட்டுத் தொகை' என நிர்ணயிக்கப்பட்ட அந்தத் தொகையாகவே இருந்திருக்க வேண்டும். காப்பீடு எடுக்கப்பட்ட பிறகு, அகழ் எந்திரமானது பதினொரு மாதங்கள்

பயன்படுத்தப்பட்டதால், 'காப்பீட்டுத் தொகை' மதிப்பிலிருந்து ஓரளவிற்கு நியாயமான தேய்மானத்தைக் கழிக்க வேண்டியது அவசியமாகும். காப்பீடு செய்தவரால் நியமிக்கப்பட்ட கணிப்பாய்வாளர், 10% தேய்மானத்தைக் கழித்து ரூ. 41,90,940/– என்ற மதிப்பிற்கு கணக்கீடு செய்ததே சரியானது. காப்பீட்டு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட கணிப்பாய்வாளர், எஞ்சிய பாகங்களின் மதிப்பைக் கழிப்பது குறித்து எழுப்பிய மற்றொரு கேள்விக்கு, தேசிய நுகர்வோர் ஆணையம் சரியான முறையில் பதிலளித்துள்ளது; எனவே, அது குறித்து மேலும் விரிவான விளக்கம் எதுவும் தேவையில்லை. எனவே, மாநில நுகர்வோர் ஆணையம் மேற்கொண்ட மதிப்பீடு முற்றிலும் சரியானது மற்றும் தேசிய நுகர்வோர் ஆணையம் மேற்கொண்ட மதிப்பீடு முழுவதுமாகத் தவறானது.

தர்மேந்திர கோயல் –எதிர்– ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (2008) 8 **எஸ்.சிசி** 279 : [2008] 11 **எஸ்.சி.ஆர்** 578 – **சார்வுறப்பட்டது.**

சிக்கா பேப்பர்ஸ் லிமிடெட் –எதிர்– நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் பலர், (2009) 7 **எஸ்.சி.சி. 777 – பொருந்தாததாகக் கருதப்பட்டது.**

<u>வழக்கு சட்ட குறிப்பு</u>

(2009) 7 எஸ்.சி.சி. 777	**பொருந்தாது**	**பத்தி 9**
[2008] 11 எஸ்.சி.ஆர் 578	**சார்வுறப்பட்டது**	**பத்தி 11**

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண். 1299/2019.

புது டெல்லியிலுள்ள தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முதல் மேல்முறையீடு எண்.182/2014 இல் 16.02.2018 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக – சௌம்யா ரூப் சன்யால், செல்வி ஹீனா ரோஹ்ரா, நிர்ணய் குப்தக், சுப்ரோ சன்யால்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக – ஜாய் பாசு, மூத்த வழக்குரைஞர், நவ்நீத் குமார், விகாஸ் பதானா, கனக் போஸ், பாரிஜாத் கிஷோர்.

நீதிமன்றத் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித் அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த மேல்முறையீடானது, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தால் ('தேசிய ஆணையம்' எனச் சுருக்கமாக அழைக்கப்படும்) 16.02.2018 அன்று முதல் மேல்முறையீடு எண். 182/2014–இல் வழங்கப்பட்ட இறுதித் தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

3. 27.03.2007 அன்று மேல்முறையீட்டாளர் ஒரு 'வோல்வோ ஹைட்ராலிக் அகழ்' எந்திரத்தை ரூ.49,75,000/– விலைக்கு வாங்கினார்; அதற்கான மதிப்பு கூட்டப்பட்ட வரி ரூ.1,99,000/– ஆகும், அதன்படி, அதன் மொத்த கொள்முதல் மதிப்பு ரூ.51,74,000/– ஆகும். மேற்படி ஹைட்ராலிக் அகழ் எந்திரம் வாங்கப்பட்ட உடனேயே, அது எதிர்மேல்முறையீட்டாளரிடம் 150719225001168 என்ற எண் கொண்ட 'ஒப்பந்ததாரர்கள், ஆலை மற்றும் எந்திரக் காப்பீட்டுத் திட்டத்தின்' கீழ் காப்பீடு செய்யப்பட்டது. அதன்பிறகு, அந்தக் காப்பீட்டுத் திட்டம் புதுப்பிக்கப்பட்டது. 22.07.2009 முதல் 21.07.2010 வரையிலான காலக்கட்டத்திற்கு, ரூபாய் 33,700/– பிரீமியம் தொகையாகச் செலுத்தியதன் அடிப்படையில், காப்பீட்டுத் தொகை ரூபாய் 46,56,600/– என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. காப்பீட்டுப் பாதுகாப்பிற்கான பத்தியில்,

அகழ் எந்திரமானது தயாரிக்கப்பட்ட ஆண்டு '2007' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. வரையறைகள் என்ற தலைப்பின் கீழ், அந்தப் காப்பீடானது பின்வரும் நிபந்தனைகளைக் கொண்டிருந்தது:–

"1. காப்பீட்டுத் தொகை –

இந்தக் காப்பீட்டின் ஒரு நிபந்தனை என்னவென்றால், காப்பீட்டுத் தொகையானது, காப்பீடு செய்யப்பட்ட சொத்திற்குப் பதிலாக அதே வகையான மற்றும் அதே திறன் கொண்ட ஒரு புதிய சொத்தை வாங்குவதற்கான செலவிற்கு நிகராக இருக்க வேண்டும்; அதாவது, அதன் கொள்முதல் விலை, சரக்குக் கட்டணம், வரிகள், சுங்கத் தீர்வை (ஏதேனும் இருப்பின்) மற்றும் பொருத்துதல் செலவுகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய 'மாற்றுச் செலவு' மதிப்பிற்கு சமமாக இருக்க வேண்டும்.

2. இழப்பீட்டு அடிப்படை –

அ) காப்பீடு செய்யப்பட்ட ஒரு பொருள் சேதமடைந்து, அதனைப் பழுதுபார்க்க முடியும் என்ற பட்சத்தில், விபத்து அல்லது இழப்பு ஏற்படுவதற்குச் சற்று முன்னதாக அந்த எந்திரம் என்ன நிலையில் இருந்ததோ, அந்த நிலைக்கு அதனை மீண்டும் கொண்டு வரத் தேவையான

செலவுகளை நிறுவனம் வழங்கும், அத்துடன், பழுதுபார்க்கும் நோக்கத்திற்காக எந்திரத்தைப் பிரிப்பதற்கும் மீண்டும் பொருத்துவதற்கும் ஆகும் செலவுகள் மற்றும் பழுதுபார்க்கும் இடத்திற்கு எந்திரத்தைக் கொண்டு செல்வதற்கும் மீண்டும் கொண்டு வருவதற்கும் ஆகும் சாதாரண சரக்குக் கட்டணம், சுங்கத் தீர்வுகள் மற்றும் வரிகள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றை, அத்தகைய செலவுகள் காப்பீட்டுத் தொகையில் சேர்க்கப்பட்டிருக்கும் பட்சத்தில் நிறுவனம் வழங்கும். காப்பீடு செய்தவருக்குச் சொந்தமான பணிமனையிலேயே பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டால், அந்தப் பழுதுபார்ப்பிற்காகச் செலவிடப்பட்ட உதிரிபாகங்களின் விலை மற்றும் தொழிலாளர் கூலி ஆகியவற்றுடன், மேலதிகச் செலவுகளை ஈடுகட்ட ஒரு நியாயமான சதவீதத் தொகையையும் சேர்த்து நிறுவனம் வழங்கும்.

மாற்றப்பட்ட பாகங்களுக்குத் தேய்மானம் என எதுவும் கழிக்கப்பட மாட்டாது, குறைந்த ஆயுட்காலம் கொண்ட பாகங்களைத் தவிர; இருப்பினும், சேதமடைந்த பழைய பாகங்களின் எஞ்சிய மதிப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி

பழுதுபார்ப்பதற்கான செலவானது, விபத்து ஏற்படுவதற்குச் சற்று முன்னதாக அந்த எந்திரத்திற்கு இருந்த உண்மையான மதிப்பிற்கு சமமாகவோ அல்லது அதைவிட அதிகமாகவோ இருந்தால், இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிப்பது கீழே உள்ள பிரிவு (ஆ)–இல் வழங்கப்பட்டுள்ள அடிப்படையில் அமையும்.

ஆ) காப்பீடு செய்யப்பட்ட ஒரு பொருள் முற்றிலும் அழிந்துபோகும் பட்சத்தில், அந்த இழப்பு ஏற்படுவதற்குச் சற்று முன்னதாக அந்தப் பொருளுக்கு இருந்த உண்மையான மதிப்பை நிறுவனம் வழங்கும், இதில் சாதாரண சரக்குக் கட்டணம், பொருத்துதல் செலவுகள் மற்றும் சுங்கத் தீர்வை ஏதேனும் இருப்பின் ஆகியவையும் அடங்கும்; ஆனால், இச்செலவுகள் காப்பீட்டுத் தொகையில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும், இத்தகைய 'உண்மையான மதிப்பானது', அந்தப் பொருளின் மாற்று மதிப்பிலிருந்து முறையான தேய்மானத்தைக் கழிப்பதன் மூலம் கணக்கிடப்படும். பழுதடைந்த அந்த எந்திரத்தைப் பிரிப்பதற்கான சாதாரணக் கட்டணங்களையும் நிறுவனம் வழங்கும்; இருப்பினும், எஞ்சிய பாகங்களின் மதிப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

மேலதிக வேலை நேரம், இரவு நேரப் பணி, பொது விடுமுறை நாட்களில் பணிபுரிதல் மற்றும் விரைவு சரக்குக் கட்டணம் ஆகியவற்றுக்காக ஏற்படும் கூடுதல் செலவுகள், எழுத்துப்பூர்வமாக முன்கூட்டியே பிரத்யேகமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தால் மட்டுமே இந்தக் காப்பீட்டின் கீழ் ஈடுசெய்யப்படும்.

பழுதுபார்ப்புப் பணியை மேற்கொள்வதற்குத் தேவையான உற்பத்தியாளரின் வரைபடங்கள், அச்சுகள் மற்றும் உள்ளகப் பெட்டிகள் போன்றவை கிடைக்காத பட்சத்தில், அத்தகைய வரைபடங்கள் அல்லது அச்சுகளை உருவாக்குவதற்கான செலவுகளுக்கு நிறுவனம் பொறுப்பேற்காது.

எந்திரத்தில் செய்யப்படும் மாற்றங்கள், மேம்பாடுகள் அல்லது முழுமையான சீரமைப்புப் பணிகளுக்கான செலவுகள் இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட மாட்டாது.

தற்காலிகப் பழுதுபார்ப்புப் பணிகளுக்கான செலவை நிறுவனம் ஏற்கும்; ஆனால், அத்தகைய பழுதுபார்ப்புகள் இறுதியான பழுதுபார்ப்புப் பணியின் ஒரு பகுதியாக இருக்க

வேண்டும் மற்றும் அவை ஒட்டுமொத்தப் பழுதுபார்ப்புச் செலவை அதிகரிக்காமல் இருக்க வேண்டும்.

மேலே உள்ள வரையறை–I–ன் படி காப்பீடு செய்யப்பட வேண்டிய தொகையை விட, காப்பீடு செய்யப்பட்ட தொகை குறைவாக இருந்தால், காப்பீடு செய்யப்பட்ட தொகைக்கும், காப்பீடு செய்யப்பட வேண்டிய தொகைக்கும் இடையே உள்ள விகிதாச்சாரத்தின் அடிப்படையில் மட்டுமே நிறுவனம் இழப்பீட்டை வழங்கும். ஒன்றிற்கும் மேற்பட்ட பொருட்கள் காப்பீடு செய்யப்பட்டிருந்தால், மேலே கூறப்பட்ட நிபந்தனைகள் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாகப் பொருந்தும்.

பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன அல்லது எந்திரம் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ரசீதுகள் மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பித்து, நிறுவனம் அதில் திருப்தி அடைந்த பின்னரே இழப்பீட்டுத் தொகையை வழங்கும். இருப்பினும், ஒரு எந்திரம் முற்றிலும் சேதமடைந்த சூழலில், காப்பீடு செய்தவரால் தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் அந்த எந்திரத்தை மாற்றீடு செய்ய முடியாவிட்டால், ரசீதுகள் மற்றும் ஆவணங்களைச்

சமர்ப்பிக்குமாறு நிறுவனம் வற்புறுத்தாது. இத்தகைய சூழலில், கோரிக்கைகள் 'இழப்பீட்டு அடிப்படையில்' தீர்க்கப்படலாம்."

4. ஹைட்ராலிக் அகழ் இயந்திரம் வாடகைக்கு எடுக்கப்பட்டு வேறு இடத்தில் பயன்படுத்தப்பட உள்ளது. மேல்முறையீட்டாளர் முறையாக இடம் மாற்றம் குறித்து தெரிவித்திருந்தார். 30.06.2010 அன்று ஹைட்ராலிக் அகழ் எந்திரமானது இவ்வாறு மாற்றப்பட்ட இடத்தில் இருந்தபோது தீவிபத்தில் மோசமாக சேதமடைந்தது. 01.07.2010 அன்று உள்ளூர் காவல்துறையிடம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது, மேலும், சேதம் குறித்து எதிர்மேல்முறையீட்டாளருக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டதுடன், சேதத்தை ஆய்வு செய்து கோரிக்கையைத் தீர்த்து வைக்குமாறு அவரிடம் கோரப்பட்டது.

5. பாதிப்பு மற்றும் சேதத்தை ஆய்வு செய்து மதிப்பீடு செய்வதற்காக 07.07.2010 அன்று எதிர்மேல்முறையீட்டாளரால் ஒரு கணிப்பாய்வாளர் நியமிக்கப்பட்டார். ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும், மேல்முறையீட்டாளரின் கோரிக்கை தீர்வு செய்யப்படவில்லை; அதன் காரணமாக மேல்முறையீட்டாளரால் 18.08.2010 மற்றும் 10.02.2011 ஆகிய தேதிகளில் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதன்பின்னர், சேத மதிப்பு கணிப்பாய்வாளரால் ரூ. 25,24,273/– என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக 13.04.2011 அன்று

மேல்முறையீட்டாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. கணிப்பாய்வாளர் கன்னிங்ஹாம் லிண்ட்சேவின் அறிக்கையிலிருந்து தொடர்புடைய பகுதி பின்வருமாறு:–

மொத்த இழப்பு	பகுதி இழப்பு மற்றும் உத்தேச முழு இழப்பு ஆகிய இரண்டு வகையான இழப்பீடு தீர்வு சாத்தியக்கூறுகளும் ஆராயப்பட்டன. இறுதியில், முழு அகழ் எந்திரத்தை பழுதுபார்ப்பதற்கான செலவு, அதன் காப்பீட்டு மதிப்பை விட மிக அதிகமாக இருக்கும் என்பது உறுதி செய்யப்பட்டது. எனவே, நாங்கள் இதனை 'உத்தேச முழு இழப்பு' வழக்காகக் கருதியுள்ளோம்.
	மேற்கூறியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, மொத்த இழப்பு சுமார் ரூ. 51,00,000.00 ஆகும்; இது அதே வகை மற்றும் அதே திறன் கொண்ட அகழ் எந்திரத்தின் தற்போதைய புதிய மாற்று விலையாகும். புதிய இயந்திரத்திற்கான இணைக்கப்பட்டுள்ள விலைப்புள்ளியைப் பார்க்கவும்.
இழப்பின் சந்தை மதிப்பு	27.03.2007 அன்று வாங்கப்பட்டது முதல் 30.06.2010 அன்று இழப்பு ஏற்பட்ட தேதி வரை, சம்பந்தப்பட்ட அகழ் எந்திரம் 3 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்கள் செயல்பாட்டில் இருந்தது. இத்தகைய அகழ் எந்திரத்தின் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் எனக் கருதினால், 3 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்களுக்கான தேய்மானம் 32.5% ஆகும். எனவே, அந்த அகழ் எந்திரத்தின் தேய்மானம் கழிக்கப்பட்ட மதிப்பு அல்லது சந்தை மதிப்பு ரூ.

	34,42,500.00 ஆகும்.
ஆதாய மீட்பு உணர்தல்	இந்த ஆதாய மீட்பு விவகாரம் முதலில் காப்பீடு செய்தவரிடம் விவாதிக்கப்பட்டது, ஆனால் அவர் அதனை வைத்துக்கொள்ள மறுத்துவிட்டார். உடனடியாக, பாதிக்கப்பட்ட எந்திரத்தின் அனைத்து விவரங்களையும், அதன் மீட்புப் பொருட்களை அகற்றுவது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்காகக் காப்பீட்டு நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட துறைக்குத் தெரியப்படுத்தினோம். அதன் விளைவாக, காப்பீட்டு நிறுவனம் 21.02.2011 தேதியிட்ட மின்னஞ்சல் வாயிலாக, சம்பந்தப்பட்ட அகழ் எந்திரத்திலிருந்து ரூ. 6,50,000 மீட்கப்பட்டதை உறுதி செய்தது. எந்திரத்தின் சேத அளவு மற்றும் இழப்பு ஏற்பட்ட இடத்தின் தொலைதூரத் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, இந்தத் தொகை மிகவும் நியாயமானது மற்றும் சரியானது என்று நாங்கள் கருதுகிறோம்.
மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பு	ரூ. 27,92,500.00 (நிகரத் தொகை)
குறைந்த காப்பீடு	அதே வகை மற்றும் திறன் கொண்ட ஓர் அகழ் எந்திரத்தின் தற்போதைய புதிய மாற்று விலை ரூ. 51,00,000.00 ஆகும்; ஆனால் அதற்கு எடுக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை ரூ. 46,56,000.00 மட்டுமே. இவை இரண்டையும் ஒப்பிடும்போது, அந்தச் சொத்து 8.71% குறைவாகக் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.
சரிசெய்யப்பட்ட இழப்பு	ரூ. 2,549,273.25 (குறைந்த காப்பீட்டுத் தொகை

	கழிக்கப்பட்ட நிகர மதிப்பு)
கழிக்கப்பட வேண்டிய தொகை	ரூ. 25 லட்சத்திற்கு மேல் ரூ. 50 லட்சம் வரையிலான மதிப்பிற்கு, இயற்கை சீற்றங்கள் தவிர்த்த இதர அபாயங்களால் ஏற்படும் கோரிக்கைகளுக்கு ரூ. 25,000.00 (நிலையான கூடுதல் தொகை) கழிக்கப்படும்.
சரிசெய்யப்பட்ட நிகர இழப்பு	ரூ. 2,524,273.00 (காப்பீட்டு திட்டக் கூடுதல் தொகை கழிக்கப்பட்ட நிகர மதிப்பு)
பரிந்துரை	ஒப்புக்கொள்ளப்பட்ட வங்கி விதிமுறைக்கு உட்பட்டு, காப்பீட்டு எண் 1507192215001168-ன் கீழ், இந்த உரிமைக்கோரலின் முழுத்தீர்வாக சரிசெய்யப்பட்ட நிகரத் தொகையான ரூ. 2,524,273-ஐ வழங்குமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

6. மேல்முறையீட்டாளர் இதனால் அதிருப்தி அடைந்து, மேற்கு வங்க மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முன் ('மாநில ஆணையம்' எனச் சுருக்கமாக அழைக்கப்படும்) வழக்கு எண் சிசி/18/11-ஐத் தாக்கல் செய்தார். அந்த அகழ் எந்திரம் முற்றிலும் சேதமடைந்துவிட்டது என்றும், எனவே காப்பீட்டுத் தொகையான ரூ. 46,56,600/- உடன் ஆண்டுக்கு 12% வட்டியும் மற்றும் புகாரில் கோரப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையையும் பெறத் தனக்கு உரிமை உள்ளது என்றும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்தார். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது, மேல்முறையீட்டாளர் தான் நியமித்த ஒரு

கணிப்பாய்வாளரின் அறிக்கையை நீதிமன்ற ஆவணமாகத் தாக்கல் செய்தார். மேற்படி கணிப்பாய்வாளர், இழப்பை இரண்டு நிலைகளில் மதிப்பீடு செய்திருந்தார்; அதாவது, 'பழுதுபார்ப்பு அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பு' ரூ. 94,64,357.70 எனவும், 'முழு இழப்பு அடிப்படையில்' ரூ. 41,90,940.00 எனவும் மதிப்பீடு செய்திருந்தார். மேற்படி கணிப்பாய்வாளரான சுப்பையா ஜெயகார்த்திகேசன் அவர்களின் அறிக்கையிலிருந்து தொடர்புடைய பகுதி பின்வருமாறு:–

பழுதுபார்ப்பு அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பு – ரூ. 94,64,357.70 (ரூபாய் தொண்ணூற்று நான்கு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஏழு மற்றும் எழுபது காசுகள் மட்டும்).	
முழு இழப்பு அடிப்படையில் மதிப்பீடு – காப்பீட்டு நிறுவனத்திடம் அறிவிக்கப்பட்டு, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அகழ் எந்திரத்தின் தற்போதைய தேய்மானம் கழிக்கப்பட்ட மதிப்பு.	ரூ. 46,56,600.00
கழிக்கவும்: காப்பீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து விபத்து நடந்த தேதி வரையிலான பயன்பாட்டிற்கான 10% தேய்மானம்.	ரூ. 465,660.00
முழு இழப்பு அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது	**ரூ. 4,190,940.00**
(ரூபாய் நாற்பத்து ஒன்று லட்சத்து தொண்ணூறாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்.)	

குறைந்த காப்பீடு

எந்திரம் முழுவதும் தீப்பற்றி எரிந்துவிட்டதால், இந்த வழக்கில் குறைந்த காப்பீடு விதிமுறை பொருந்தாது என்பது எனது கருத்தாகும். எந்திரம் வாங்கப்பட்ட தேதியிலிருந்து கடைசியாக காப்பீடு புதுப்பிக்கப்பட்ட தேதி வரை முறையான தேய்மானம் கழிக்கப்பட்ட பின்னரே, ரூ. 46,56,600.00–க்குக் காப்பீடு செய்யப்பட்டுள்ளது, எனவே, இந்த வழக்கில் நான் 'குறைந்த காப்பீடு' எதையும் பயன்படுத்தவில்லை."

7. மாநில ஆணையம் அந்தப் புகாரை அனுமதித்தது. 04.12.2013 தேதியிட்ட அதன் உத்தரவின் தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு :–

> "மூன்றாவதாக, காப்பீட்டு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட கணிப்பாய்வாளர், எந்திரத்தின் அசல் கொள்முதல் விலையான ரூ. 51,74,000–ல் 32% தேய்மான மதிப்பை மட்டுமே கணக்கில் கொண்டு இழப்பீட்டை மதிப்பிட்டுள்ளார்; ஆனால் 07.07.2009 அன்று காப்பீடு புதுப்பிக்கப்பட்டபோதே, தேய்மான மதிப்பு கழிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட பின்னரே அதற்கான காப்பீட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்தரப்பினரின் 8–வது கேள்விக்கான பதிலில், காப்பீடு செய்தவரால் நியமிக்கப்பட்ட கணிப்பாய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளபடி–காப்பீட்டைப் புதுப்பிக்கும் போதே எதிர்தரப்பினரால் தேய்மானம்

கணக்கிடப்பட்டுள்ளது என்பதும், தேய்மானம் என்பது ஒருமுறை மட்டுமே கணக்கிடப்பட வேண்டும் என்பதும், அதுவும் காப்பீடு புதுப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து விபத்து நடந்த தேதி வரையிலான காலத்திற்கு மட்டுமே கணக்கிடப்பட வேண்டும் என்பதும் முற்றிலும் நியாயமானதாகும். மீண்டும், எதிர்தரப்பினரின் 9–வது கேள்விக்கான பதிலில்–அகழ் எந்திரத்தின் உரிமையாளரிடமிருந்து முறையான விண்ணப்பப் படிவத்தைப் பெறாமலேயே, காப்பீட்டைப் புதுப்பிக்கும்போது காப்பீட்டு நிறுவனம் தன்னிச்சையாக ஒரு மதிப்பினை நிர்ணயித்துள்ளதால், 8.71% 'குறைந்த காப்பீடு' என்பது தவறானது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்தரப்பினரின் 10–வது கேள்விக்கான பதிலில், காப்பீடு செய்தவரால் நியமிக்கப்பட்ட கணிப்பாய்வாளர் தெரிவித்துள்ள கருத்தை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம்; அதாவது, எந்திரத்தின் எஞ்சிய பாகங்கள் காப்பீட்டு நிறுவனத்திற்கே சொந்தமான சொத்தாகும், அதனைச் சேதமடைந்த எந்திரத்தின் உரிமையாளர் மீது கட்டாயப்படுத்தித் திணிக்க முடியாது.

…….

உத்தரவிடப்பட்டது

இந்தக் புகாரானது ஏற்கப்பட்டு, 1 மற்றும் 2 ஆம் எதிர்தரப்பினருக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்படுகிறது, இதன்மூலம், எதிர்தரப்பினர் ரூ. 41,90,940/– (ரூபாய் நாற்பத்து ஒன்று லட்சத்து தொண்ணூறாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) தொகையினை, உரிமைக்கோரல் தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆண்டுக்கு 8% வட்டியுடன் வழங்குமாறு உத்தரவிடப்படுகிறது. மேற்படி எதிர்தரப்பினர், அலைக்கழிப்பு, மன உளைச்சல் மற்றும் நிதி இழப்பு ஆகியவற்றிற்கான இழப்பீடாக ரூ. 1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மற்றும் வழக்குச் செலவுகளுக்காக மற்றுமொரு தொகையான ரூ. 5,000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) ஆகியவற்றைச் செலுத்துமாறு இதன் மூலம் உத்தரவிடப்படுகிறார்கள். முழுத் தொகையும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் 1 மற்றும் 2 ஆம் எதிர்தரப்பினர் மூலம் செலுத்தப்பட வேண்டும்; தவறும்பட்சத்தில், முழுத் தொகையும் வசூலிக்கப்படும் வரை ஆண்டுக்கு 9% வட்டி செலுத்தப்பட வேண்டும்."

8. இதனால் அதிருப்தி அடைந்த எதிர்மேல்முறையீட்டாளர், முதல் மேல்முறையீடு எண் 182/2014-ஐத் தாக்கல் செய்தார்; அதனைத் தேசிய ஆணையம் தனது 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம் பகுதியளவு அனுமதித்தது. தேசிய ஆணையம் தீர்ப்பளித்தது பின்வருமாறு :

> "... ... ...விபத்து நடந்த நாளன்று அந்தச் சேதமடைந்த எந்திரம் என்ன நிலையில் இருந்ததோ, அதே நிலையில் அதனை ஈடுசெய்வதற்கு அல்லது மாற்று எந்திரத்தை வழங்குவதற்கு காப்பீட்டு நிறுவனம் பொறுப்பாகும். தற்போதைய வழக்கில், காப்பீட்டு ஆவணத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட காப்பீட்டு மதிப்பு ரூ. 46,56,000/- எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஒரு புதிய எந்திரம் ரூ. 51,00,000/-க்குக் கிடைக்குமெனில், அதே போன்ற 3.25 ஆண்டுகள் பழமையான ஒரு எந்திரத்தின் மதிப்பானது- புதிய எந்திரத்தின் தற்போதைய விலையிலிருந்து 3.25 ஆண்டுகளுக்கான தேய்மானத்தைக் கழிப்பதன் மூலம் பெறப்படும் தோராயமான விலையின் அடிப்படையில் மட்டுமே அமைய முடியும். வெளிப்படையாகக் கூறின், இந்தத் தொகையானது காப்பீட்டு மதிப்பை விடக் குறைவாக இருப்பதால், ஈடுசெய்வதற்கான மதிப்பாகக்

காப்பீட்டு நிறுவனம் இந்த விலையையே தேர்ந்தெடுக்கும். இந்த அடிப்படையில், கணிப்பாய்வாளர் புதிய எந்திரத்தின் தற்போதைய விலையிலிருந்து, எந்திரம் வாங்கப்பட்ட தேதியிலிருந்து விபத்து நடந்த தேதி வரை ஆண்டுக்கு 10% தேய்மானத்தைக் கழித்து, மாற்று எந்திரத்திற்கு ஏற்ற தேய்மானம் செய்யப்பட்ட விலையை ரூ. 34,42,500/– எனக் கணக்கிட்டுள்ளார்."

தேசிய ஆணையம் மேலும் கருத்துரைத்தது என்னவென்றால், எதிர்மேல்முறையீட்டாளரால் பெறப்பட்ட ரூ.6,50,000/– மதிப்பிலான மீட்புப் பொருளின் மதிப்பை, மேற்கூறிய தொகையான ரூ.34,42,500/– லிருந்து கழித்திருக்க முடியாது. எனவே, மேல்முறையீட்டாளரின் காப்பீட்டு கோரிக்கையை தீர்வு செய்ய, ரூ.34,17,500/– தொகையை வழங்குமாறு தேசிய ஆணையம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிட்டது. எதிர்மனுதாரர் இணக்கத் தொகையாக ரூ.25,42,273/– வழங்கச் சம்மதித்ததைக் கருத்தில் கொண்டு, மீதமுள்ள தொகையான ரூ.8,93,227/– க்கு ஆண்டுக்கு 8% வட்டி விகிதத்தில் வட்டி செலுத்த அவர் பொறுப்பாவார் எனக் கண்டறியப்பட்டது.

9. தேசிய ஆணையத்தின் இந்தத் தீர்ப்பு, தற்போது மேல்முறையீட்டில் உள்ளது. மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சௌம்யா ரூப் சன்யால் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஜாய் பாசு ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டறிந்தோம். இரு கணிப்பாய்வாளர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டபடி, இது ஒரு "முழுமையான இழப்பு" சார்ந்த வழக்கு என்றும், இருதரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட "காப்பீட்டுத் தொகைக்கு" இணங்க, தனக்கு ரூ. 46,56,000/– பெற உரிமை உண்டு என்றும் மேல்முறையீட்டாளர் வாதிட்டார். அகழ் எந்திரம் 2007–ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது என்பதை காப்பீட்டு நிறுவனம் நன்கு அறிந்திருந்தது என்றும், அதற்குரிய தேய்மானத்தைக் கழித்த பிறகே, காப்பீட்டுப் பாதுகாப்பிற்காக அதன் மதிப்பு ரூ. 46,56,600/– என நிர்ணயிக்கப்பட்டது என்றும் வாதிடப்பட்டது. மேற்கூறிய வாதத்திற்குப் பதிலளிக்கும் வகையில், காப்பீட்டுத் தொகையாக அத்தகைய ஒரு தொகை குறிப்பிடப்பட்டிருந்தாலும், தற்போதைய வழக்கில், உரிய தேய்மானத்திற்குப் பிறகு அதன் உண்மையான மதிப்பு தனது கணிப்பாய்வாளரால் சுட்டிக்காட்டப்பட்ட அளவிலேயே இருக்க வேண்டும் என்று வாதிடும் உரிமையை காப்பீட்டு நிறுவனம் இழந்துவிடாது என்று எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டது. சிக்கா பேப்பர்ஸ் லிமிடெட் –எதிர்– நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும்

பலர், (2009) 7 எஸ்.சி.சி. 777 என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சார்வுறப்பட்டது.

10. தீ விபத்தின் காரணமாக, அந்த அகழ் எந்திரம் "முழுமையாக பாதிப்படைந்தது" என்பதும், அதற்காக அந்த இயந்திரத்தின் மாற்றுச் செலவைப் பெற காப்பீடு செய்தவர் தகுதியுடையவர் என்பதும் இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொதுவான விஷயமாகும். இருப்பினும், காப்பீடு செய்தவர் பெறத் தகுதியுடைய அந்தத் தொகை அல்லது மதிப்பு எவ்வளவு என்பதுதான் இங்கு முக்கியமான விஷயமாகும்.

11. கேள்விக்குரிய அந்த காப்பீட்டுக் கொள்கை, அகழ் எந்திரம் 2007–ஆம் ஆண்டு "தயாரிக்கப்பட்டது" என்று குறிப்பிடுகிறது; ஆனால், அந்த காப்பீட்டுக் கொள்கை 22.07.2009 முதல் 21.07.2010 வரையிலான காலக்கட்டத்திற்குரியது. அகழ் எந்திரம் 2007–ஆம் ஆண்டு 51.74 லட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்பதை இரு தரப்பினரும் அறிந்திருந்தனர். ஒப்பந்தத்தில் காப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ. 46,56,600/– எனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்தத் தொகையின் முக்கியத்துவத்தையும், காப்பீடு பெறப்பட்ட தேதியில் அதுவே அகழ் எந்திரத்தின் மதிப்பைக் குறிக்கிறது என்பதையும் இரு தரப்பினரும் அறிந்திருந்ததாகவே கருதப்பட வேண்டும். இது தொடர்பாக, தர்மேந்திர கோயல் –எதிர்– ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (2008) 8 எஸ்.சிசி 279

என்ற வழக்கில் எட்டப்பட்ட முடிவும் மற்றும் தெரிவிக்கப்பட்ட கருத்துகளும் குறிப்பிடத்தக்கவை ஆகும். அந்த வழக்கில், ஒரு வாகனம் 2000–ஆம் ஆண்டில் வாங்கப்பட்டது மற்றும் அதற்கான காப்பீட்டு காலம் 2002–2003 ஆகும். வாகனம் விபத்துக்குள்ளானது. கணிப்பாய்வாளர் இது முழுமையான இழப்பு எனக் கண்டறிந்து, அதன் மதிப்பை ரூ. 1,80,000/– என நிர்ணயம் செய்தார். நுகர்வோர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், தேசிய ஆணையம் ஏற்கனவே குறிப்பிட்ட ரூ. 1,80,000/– இழப்பீட்டுத் தொகையை வட்டியுடன் வழங்க உத்தரவிட்டது. இந்த மதிப்பீட்டை எதிர்த்து, காப்பீடு செய்தவர் மேல்முறையீடு செய்தார், அதில், மற்றவற்றுடன், காப்பீட்டுத் தொகையான ரூ. 3,54,000/– முழுவதையும் பெற தனக்கு உரிமை உண்டு என்றும் அவர் வாதிட்டார். வாகனத்தின் மதிப்பு ரூ. 3,54,000/– என்பதை காப்பீட்டு நிறுவனம் ஏற்றுக்கொண்டதனால், அந்த மதிப்பிற்கு அந்த நிறுவனம் கட்டுப்பட்டது என்ற கொள்கையைத் தீர்ப்பின் 5 மற்றும் 7–வது பத்திகள் வெளிப்படுத்துகின்றன. மேற்படி 5 மற்றும் 7–வது பத்திகள் பின்வருமாறு:

> "5. நாங்கள் இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதங்களையும் கேட்டறிந்தோம், மேலும் இது தொடர்பான ஆவணங்களை மிகவும் கவனமாகப் பரிசீலித்தோம். மேலே விவரிக்கப்பட்ட பொருண்மைகள் எவராலும் மறுக்கப்படவில்லை. ஒப்புக்கொள்ளப்பட்டபடி, 13–2–2002 அன்று ரூ. 8,498/–

காப்பீட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டு, ரூ. 3,54,000/– மதிப்பிற்கு எடுக்கப்பட்ட காப்பீட்டுத் கொள்கை அமலில் இருந்த காலத்திலேயே, அதாவது 10–9–2002 அன்று இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட கணிப்பாய்வாளரால், இந்த வாகனம் முழுமையான இழப்பு என அறிவிக்கப்பட்டதும் ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும்; இருப்பினும், அந்த முழுமையான இழப்பின் அடிப்படையில் வாகனத்தின் மதிப்பு ரூ. 1,80,000/– என மதிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, 13–2–2002 அன்று காப்பீட்டு நிறுவனமே வாகனத்தின் மதிப்பை ரூ. 3,54,000/– என ஏற்றுக்கொண்டதால், விபத்து நடந்த தேதியான 10–9–2002 அன்று முழுமையான இழப்பின் அடிப்படையில் வாகனத்தின் மதிப்பு ரூ. 1,80,000/– மட்டுமே என்று அந்த நிறுவனம் கோர முடியாது என்பது எங்களது கருத்தாகும்.

…… ……‥ ……·

7. மோட்டார் வாகனச் சட்டம் 1988–இன் பிரிவு 146 இன் அத்தியாயம் XI–இல் வழங்கப்பட்டுள்ளபடி ஒரு வாகன உரிமையாளர் காப்பீட்டுத் கொள்கை எடுப்பதைக் கடமையாக்குகிறது என்பதையும், அத்தகைய காப்பீடு

இல்லாமல் இயக்கப்படும் எந்தவொரு வாகனமும் அந்தச் சட்டத்தின் பிரிவு 196–இன் கீழ் தண்டனைக்குரியது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, இத்தகைய கடுமையான சட்ட விதிகளின் பின்னணியிலும் மற்றும் தாங்கள் ஒரு மேலோங்கிய நிலையில் இருப்பதாலும், காப்பீட்டு நிறுவனங்கள் பெரும்பாலும் நியாயமற்ற முறையில் நடந்துகொள்கின்றன என்பது தெளிவாகிறது; அதாவது, ஒரு குறிப்பிட்ட காப்பீடு செய்யப்பட்ட பொருளின் மதிப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, இழப்பீடு வழங்க வேண்டிய சூழல் வரும்போது ஏதோ ஒரு சாக்குப்போக்கைக் கூறி அதே மதிப்பினை ஏற்க மறுக்கின்றன. "ஏற்றுக்கொள்ளுங்கள் அல்லது விட்டுவிடுங்கள்" என்ற இத்தகைய அணுகுமுறை சட்டப்படி தவறானது என்பது மட்டுமன்றி, அறநெறிப்படியும் நியாயப்படுத்த முடியாதது; எனவே இது முற்றிலும் தேவையற்ற ஒன்றாகும். காப்பீட்டுத் கொள்கையைப் புதுப்பிக்கும்போதே, அந்த வாகனத்திற்கான ஒரு மதிப்பை நிறுவனமே ஏற்கனவே நிர்ணயித்துள்ள நிலையில், கணிப்பாய்வாளரின் அறிக்கை குறைவான மதிப்பைக் கொண்டுள்ளது என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களை மேல்முறையீட்டாளர் தான் சமர்ப்பிக்க வேண்டும் என்ற

வாதத்தையும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இச்சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, 13–2–2002 அன்று காப்பீட்டுத் கொள்கையைப் புதுப்பித்தபோது நிர்ணயிக்கப்பட்ட வாகனத்தின் மதிப்பிற்கு காப்பீட்டு நிறுவனம் கட்டுப்பட்டது என நாங்கள் உறுதிபடத் தெரிவிக்கிறோம்."

12. இருப்பினும், கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. பாசு அவர்கள், மேற்கூறிய சிக்கா பேப்பர்ஸ் வழக்கில் இந்த நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சார்ந்திருந்தார். அந்த வழக்கில், 1997–ஆம் ஆண்டு ரூ. 45 லட்சத்திற்கு வாங்கப்பட்ட டீசல் மின்இயற்றி, 08.04.1999 முதல் 07.04.2000 வரையிலான காலக்கட்டத்திற்கு ரூ. 35 லட்சத்திற்கு காப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய டீசல் மின்இயற்றி பழுதடைந்தது. புகார்தாரர் தான் பழுதுபார்ப்பதற்காகச் செலவிட்ட தொகையான ரூ. 25 லட்சத்தைக் கோரினார்; ஆனால் காப்பீட்டு நிறுவனம், கணிப்பாய்வாளரின் அறிக்கையை ஆதாரமாகக் காட்டி, அந்தத் தொகையை வழங்க ஒப்புக்கொள்ளவில்லை. கணிப்பாய்வாளரின் கூற்றுப்படி, நிகர இழப்பு ரூ. 14,45,000/– ஆகும். ஆனால், மின்இயற்றி அதன் உண்மையான மதிப்பை விடக் குறைவாகக் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாகக் கணிப்பாய்வாளர் கண்டறிந்தார்; அதன் காரணமாக, கணக்கிடப்பட்ட நிகர இழப்புத் தொகையிலிருந்து 25.71%

கழிக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். அதன் விளைவாக, நிகர மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பு ரூ. 10,47,491/– என்ற அளவில் இருந்தது. இது குறித்து இந்த நீதிமன்றம் இரண்டு கேள்விகளை எழுப்பியது:

> "(1) புகார்தாரர் டீசல் மின்இயற்றியைப் பழுதுபார்ப்பதற்காக உண்மையாகச் செலவிட்ட தொகையான ரூ. 25,00,000/– இலிருந்து சுமார் ரூ. 10,55,000/– ஐக் கழித்து, இழப்பு ரூ. 14,45,000/– என மதிப்பிட்ட கணிப்பாய்வாளரின் 15–05–2000 தேதியிட்ட அறிக்கையை காப்பீட்டாளர் ஏற்றுக்கொண்டது நியாயமானதா?
>
> (2) கணிப்பாய்வாளர் தனது 15–5–2000 தேதியிட்ட அறிக்கையில் ரூ. 14,45,000/– என மதிப்பிட்ட இழப்புத் தொகையிலிருந்து, 'குறைந்த மதிப்பிலான காப்பீடு' எனக் கூறி, காப்பீட்டாளர் ரூ. 3,71,509.50 (25.71%) தொகையைக் கழித்தது நியாயமானதா?"

முதல் கேள்வியைப் பொறுத்தவரை, இயந்திரத்தின் இயல்பான பயன்பாடு அல்லது தேய்மானத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்குக் காப்பீட்டு நிறுவனம் பொறுப்பாகாது என்று இந்த நீதிமன்றம் கண்டறிந்தது, மேலும், காப்பீடு செய்யப்பட்ட சொத்திற்குப் பதிலாக அதே போன்ற புதிய சொத்தை மாற்றுவதற்கான செலவானது, ஏற்கனவே இயல்பான

தேய்மானத்திற்கு உள்ளான இயந்திரம் அல்லது அதன் பாகங்களுக்குப் பொருந்தாது என்ற விதிவிலக்கிற்கு உட்பட்டது. இரண்டாவது கேள்வியைப் பொறுத்தவரை, அந்த வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில், அதில் 'குறைந்த மதிப்பிலான காப்பீடு' இருப்பதைக் கண்டறிய முடிந்தது; எனவே, 25.71% தொகையைப் பிடித்தம் செய்தது சரிதான் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்தது.

13. மேற்படி சிக்கா பேப்பர்ஸ் வழக்கின் தீர்ப்பு, தற்போதைய வழக்கிற்கு எந்த வகையிலும் தொடர்புடையதாக இருக்கும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. குறைந்த மதிப்பிலான காப்பீடு தொடர்பான வழக்குகள் முற்றிலும் மாறுபட்ட அடிப்படையைக் கொண்டவை. அத்தகைய வழக்குகளில், காப்பீட்டு நிறுவனத்திற்குச் சேர வேண்டிய முறையான காப்பீட்டுக் கட்டணம் அதற்கு மறுக்கப்படுகிறது. காப்பீடு செய்யப்பட்ட பொருளின் உண்மையான மதிப்பை விட, காப்பீட்டுத் தொகை ஏதேனும் ஒரு வகையில் குறைவாக இருந்து, அங்கு ஒரு பகுதி மாற்றமோ அல்லது பகுதி இழப்போ ஏற்படும் பட்சத்தில், அந்த மதிப்புக் குறைவின் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப தொகையைப் பிடித்தம் செய்ய காப்பீட்டு நிறுவனத்திற்கு உரிமை உண்டு என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். 25.71% பிடித்தம் தொடர்பான கணிப்பாய்வாளரின் அறிக்கையை இந்த நீதிமன்றம் உறுதி செய்ததற்கு, மேற்கூறிய சிக்கா பேப்பர்ஸ் வழக்கின் இந்த அம்சமே முக்கியக்

காரணமாக அமைந்தது. தற்போதைய வழக்கிலும் கூட, 'வகையங்கள்' என்ற தலைப்பின் கீழ், 2–வது பத்தியில் உள்ள நிபந்தனையானது பின்வருமாறு குறிப்பிடுகிறது: காப்பீட்டுத் தொகையானது, 'காப்பீடு செய்யப்பட வேண்டிய தொகையை விட குறைவாக இருந்தால்... காப்பீடு செய்யப்பட வேண்டிய தொகைக்கும், உண்மையான காப்பீட்டுத் தொகைக்கும் இடையிலான விகிதாச்சாரத்தின் அடிப்படையில் மட்டுமே நிறுவனம் இழப்பீடு வழங்கும்'."

14. இந்த விவகாரத்தில், "குறைந்தப்பட்ச காப்பீடு" செய்யப்பட்டதாக காப்பீட்டு நிறுவனம் எந்தவொரு வாதத்தையும் முன்வைக்கவில்லை. மறுபுறம், காப்பீட்டுத் தொகையான ரூ.46,56,600/– என்பதற்கு மாறாக, தேய்மானம் கழிக்கப்பட்ட அதன் மதிப்பு ரூ.34,42,500/– என்று வாதிடப்பட்டது. எனவே, காப்பீட்டு நிறுவனத்தின் வாதப்படி பார்த்தால், இது ஒருவேளை "மிகை காப்பீடு" செய்யப்பட்ட ஒரு விவகாரமாகவே இருந்திருக்கும். காப்பீட்டுக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதன் அடிப்படையில் பார்த்தால், காப்பீட்டு நிறுவனம் எதை உண்மையான மதிப்பு என்று நியாயப்படுத்துகிறதோ, அதைக் காட்டிலும் அதிகமான தொகையை அக்குழுமம் பெற்றுள்ளது.

15. இந்தச் சூழலில் அல்லது இத்தகைய பொருண்மைகளின் பின்னணியில்தான், தற்போதைய வழக்கிற்கான கேள்வி எழுகிறது. இரு தரப்பினரும் முழு விழிப்புணர்வுடன், காப்பீடு செய்யப்பட்ட பொருளின்

உண்மையான மதிப்பாக ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயித்த பிறகு, அந்தத் தொகையை மறுப்பதற்கோ அல்லது காப்பீட்டுத் தொகையாக அறிவிக்கப்பட்டதிலிருந்து உண்மையான மதிப்பு மாறுபட்டது என்று வாதிடுவதற்கோ எந்தத் தரப்பிற்கும் உரிமை இல்லை. வழக்கின் அடிப்படையையே பாதிக்கக்கூடிய முக்கியமான பொருண்மைகளைத் தெரிவிக்காமல் மறைக்கும் பட்சத்தில், அந்த ஒப்பந்தத்தின் புனிதமே பாதிக்கப்படலாம் என்பதை ஒருவர் புரிந்துகொள்ள முடியும். அனால், இரு தரப்பினரும் ஒரு புரிதலுக்கு வந்து உடன்பட்ட நிலையில், அந்தப் புரிதலானது தவறான தகவல்கள், மோசடி அல்லது கட்டாயப்படுத்துதல் ஆகியவற்றால் பாதிக்கப்படாதவரை, நிர்ணயிக்கப்பட்ட அந்தத் தொகைக்கு இரு தரப்பினரும் கட்டுப்பட்டவர்கள் ஆவர். மேற்கூறிய தர்மேந்திர கோயல் வழக்கின் கருத்தும் அதன் அடிப்படைத் தத்துவமும் இதுவே ஆகும்.

16. தற்போதைய வழக்கின் தொடர்புடைய நிபந்தனை, அதாவது 'இழப்பீட்டு அடிப்படை' என்ற விதியின் கூறு (b), 'சரியான தேய்மானத்தைக்' கழித்த பிறகு அதன் உண்மையான மதிப்பைத் தீர்மானிப்பதைப் பற்றிப் பேசுகிறது. காப்பீட்டு நிறுவனத்தின் கணிப்பாய்வாளர், ஒரு புதிய அகழ் எந்திரத்தின் விலை ரூ. 51 லட்சம் எனக் கொண்டு, அதன் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் எனக் கருதி, 32.5% தேய்மானத்தைக் கழித்து இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிட்டுள்ளார்.

எனவே, அவருடைய மதிப்பீட்டில், ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளில் நிர்ணயிக்கப்பட்ட ரூ. 46,56,600/– என்ற தொகைக்கு எந்தவொரு முக்கியத்துவமும் அளிக்கப்படவில்லை. அவர் சொல்வது சரிதானா, நியாயமானதா, அகழ் எந்திரத்தின் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் என்று அவர் எப்படி கருத முடியும்? ஒருவேளை அதுதான் இரு தரப்பினருக்கும் இடையிலான புரிதலாக இருந்திருந்தால், காப்பீட்டுத் தொகை வேறு ஒரு மதிப்பாக இருந்திருக்கும். ஒருவேளை, கணிப்பாய்வாளர், காப்பீட்டு ஒப்பந்தம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து விபத்து நடந்த நாள் வரையிலான காலத்திற்கு மட்டுமே தேய்மானத்தைக் கணக்கிட்டிருந்தால், அத்தகைய நடவடிக்கை நிச்சயமாக நியாயமானதாக இருந்திருக்கும். ஆனால், மேற்கொண்ட நடவடிக்கையானது, காப்பீட்டு ஒப்பந்தத்திற்குப் பிந்தைய காலத்திற்கான தேய்மானத்தை மட்டும் கணக்கில் கொள்ளாமல், ஒப்பந்தத்திற்கு முந்தைய காலத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. அந்த மதிப்பீடு செய்யும் பணி ஏற்கனவே இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டுவிட்டது; மேலும் அவர்களின் மதிப்பீட்டின்படி, காப்பீடு எடுக்கப்பட்ட நாளில் அகழ் எந்திரத்தின் உண்மையான மதிப்பு ரூ. 46,56,600/– ஆகும். இத்தகைய ஒப்பந்தம் மற்றும் புரிதல் இருக்கும் நிலையில், கணிப்பாய்வாளர் காப்பீட்டுப் பத்திரம் அல்லது ஒப்பந்தம் தொடங்கப்பட்ட தேதிக்கு முந்தைய காலத்திற்கான தேய்மானத்தைக் கணக்கிட்டிருக்க முடியாது. மேற்கூறிய விதியின் நோக்கம் யாதெனில்,

எந்திரம் முற்றிலும் பழுதடைந்த அந்த நாளில், அதன் சரியான மதிப்பீட்டை கண்டறிவதே ஆகும். காப்பீடு செய்யப்பட்ட சொத்திற்குத் தீ விபத்து ஏற்பட்ட தேதியில் அதன் உண்மையான மதிப்பை மதிப்பிடுவதற்கு, காப்பீட்டு ஒப்பந்தம் தொடங்கப்பட்ட தேதிக்குப் பிந்தைய காலத்திற்கான கணக்கீட்டை மட்டுமே அவர் மேற்கொண்டிருக்க முடியும். அத்தகைய மதிப்பீட்டு நோக்கங்களுக்காக, ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளில் 'காப்பீட்டுத் தொகை' என விவரிக்கப்பட்ட தொகையிலிருந்தே கணக்கீடு தொடங்கப்பட வேண்டும். காப்பீட்டுத் தொகை என நிர்ணயிக்கப்பட்ட அந்த மதிப்பை அலட்சியப்படுத்தவோ அல்லது புறக்கணிக்கவோ கணிப்பாய்வாளருக்கோ அல்லது காப்பீட்டு நிறுவனத்திற்கோ அதிகாரம் இல்லை. தற்போதைய வழக்கில், மேற்கூறிய மதிப்பைக் கருத்தில் கொண்டே இழப்பு மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

17. முழு விவகாரத்தையும் பரிசீலித்ததில், எங்களது தீர்முடிவின்படி, காப்பீட்டு நிறுவனத்துடனான ஒப்பந்தமானது மோசடி, கட்டாயப்படுத்துதல் அல்லது தவறான தகவல்கள் மூலம் பெறப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர அல்லது 'உச்சக்கட்ட நம்பிக்கை' கொள்கை மீறப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர – மற்ற அனைத்துச் சூழல்களிலும், காப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட மதிப்பிற்கு இரு தரப்பினரும் கட்டுப்பட்டவர்கள் ஆவர். எனவே, கணிப்பாய்வாளரோ அல்லது காப்பீட்டு

நிறுவனமோ 'காப்பீட்டுத் தொகை' என்ற மதிப்பை எந்த வகையிலும் கேள்விக்குட்படுத்துவதோ அல்லது புறக்கணிப்பதோ நியாயமானது அல்ல. மேற்கொண்டு தேய்மானம் ஏதேனும் இருக்குமாயின், அதனைக் 'காப்பீட்டுத் தொகை' என்ற மதிப்பைக் கருத்தில் கொண்டே எப்போதும் கணக்கிட முடியும். எனவே, இந்த வழக்கில் தொடக்கத் தொகையானது, 'காப்பீட்டுத் தொகை' என நிர்ணயிக்கப்பட்ட அந்தத் தொகையாகவே இருந்திருக்க வேண்டும். காப்பீடு எடுக்கப்பட்ட பிறகு, அகழ் எந்திரமானது பதினொரு மாதங்கள் பயன்படுத்தப்பட்டதால், 'காப்பீட்டுத் தொகை' மதிப்பிலிருந்து ஓரளவிற்கு நியாயமான தேய்மானத்தைக் கழிக்க வேண்டியது அவசியமாகும். காப்பீடு செய்தவரால் நியமிக்கப்பட்ட கணிப்பாய்வாளர், 10% தேய்மானத்தைக் கழித்து ரூ. 41,90,940/– என்ற மதிப்பிற்கு கணக்கீடு செய்ததே சரியானது. காப்பீட்டு நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட கணிப்பாய்வாளர், எஞ்சிய பாகங்களின் மதிப்பைக் கழிப்பது குறித்து எழுப்பிய மற்றொரு கேள்விக்கு, தேசிய நுகர்வோர் ஆணையம் சரியான முறையில் பதிலளித்துள்ளது; எனவே, அது குறித்து மேலும் விரிவான விளக்கம் எதுவும் தேவையில்லை. எனவே, மாநில நுகர்வோர் ஆணையம் மேற்கொண்ட மதிப்பீடு முற்றிலும் சரியானது என்றும், தேசிய நுகர்வோர் ஆணையம் மேற்கொண்ட மதிப்பீடு முழுவதுமாகத் தவறானது என்றும் நாங்கள் கருதுகிறோம்.

18. எனவே, இந்த மேல்முறையீட்டை நாங்கள் அனுமதித்தும், தேசிய நுகர்வோர் ஆணையத்தின் தீர்முடிவை நீக்கறவு செய்தும், மற்றும் மாநில நுகர்வோர் ஆணையம் வழங்கிய தீர்ப்புரை மற்றும் உத்தரவை மீட்டளிக்குமாறு உத்தரவிடுகிறோம். செலவுத்தொகை குறித்த உத்தரவேதுமில்லை.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."